REG. NO. M. 1957. May-June 1926. VOL. II, NO. 10-11.

சிந்தாமணி

தமிழ் நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கிய
மாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர் சகோதரி வி. பாலம்மாள்.

மலர் II.] அக்ஷய—வைகாசி-ஆனி [இதழ் 10-11.

Miss V. R. G. Mudali from Durban writes under date 5-6-26 as follows:—

Your journal reaches us regularly every month and I may mention that the date of its arrival is keenly anticipated by every-one of the household. It is needless for me to mention how popular the paper is out here in South Africa and, as a lady's paper, it stands alone. Wishing 'Chinthamani' the success it rightly deserves.

All Rights Reserved. வெளி நாடு ரூ. 6.

Mr. N. P. Subrahmanya Iyer, Assistant Secretary to the Government of Mysore, P. W. D. (Retired), under date 30-4-1926.

I have had the pleasure of going through six issues of "CHINTAMANI" which has run into second volume, and am gratified to observe that its talented Editor has striven to keep up the standard of excellence she has originally set before her. It is a high class monthly, as announced on its title page, primarily intended to raise the status of our women, morally, intellectually and socially, and emancipate them from the trammels of unmeaning and pernicious customs which pass for shastric injunctions; as well as from the tyranny of monstrous opinions which consciously or otherwise seek to hold them in perpetual bondage. The crudities of some of their conceptions are exposed, through the medium of simple stories, in a quiet, inoffensive manner. I am sure that, after a perusal of the journal, no woman, for that matter none of its readers, would rest satisfied with the present state of Hindu Society and would fail to be inspired to make an effort, however humble, to set our house in order. I am indeed thankful that one of the Hindu ladies, eminently qualified for the task by her scholarship, both in Tamil and Sanskrit, has come forward to and set her mind on, removing abuses which cloud the vision of our women and and are prejudical to their own interests. Every Tamil home should have a copy of the journal. I heartily wish the scholarly Editor success in her bold and timely endeavour to reform our society.

சிந்தாமணி வருஷ சந்தா விவரம்.

	ரூ.	அ.	பை,
மகா ராஜாக்களுக்கு	50	0	0
ஜமீந்தார்களுக்கு	30	0	0
போஷகர்களுக்கு	25	0	0
நன்கொடையாளருக்கு... ...	15	0	0
அபிமானிகளுக்கு	10	0	0
சந்தாதார்க்கு	5	0	0
வெளி நாடு	6	0	0

சகோதரி வி. பாலம்மாள் எழுதிய தமிழ் நாவல்கள்.

உண்மைக்காதல் அல்லது ஒற்றுமையின் வெற்றி.

Crown 8vo. 64 பக்கங்கள். விலை 0-5-0.

ஆசார சீர்திருத்தத்தின் அவசியத்தையும் பணத்திமிற் கொண்டவர்களின் துஷ்டச் செய்கைகளையும் கற்புடை மகளிரின் உயர்குணத்தையும் எடுத்துரைப்பது.

சுபோத ராம சரிதம்.

Royal 16mo. 56 பக்கங்கள். விலை 0-6-0.

வடமொழி கற்க விரும்புவோர்களுக்கென சிந்தாமணியில் அர்த்தத்துடன் வெளி வந்து கொண்டிருக்கும் ராமாயண சுலோகங்களின் தனிப் புத்தகம். ஆறு காண்டங்களுமடங்கியது.

திலகவதி.

Crown 8vo. 320 பக்கங்கள். விலை 1-4-0.

கதாநாயகியான திலகவதி தனக்கேற்பட்ட பல கஷ்டங்களையும் சகித்து தீர்க்காலோசனையுடனும் கண்ணியத்துடனும் நடந்து கொள்ளல் படிக்கப் படிக்க உற்சாகத்தையளிக்கும். ஹிந்துக்குடும்ப சீர்திருத்தங்களைப்பற்றிய விவரங்களை இக்கதையில் நன்கறியலாம். பெண்களுக்குரிய கல்வி, தைரியம், பொறுமை, அடக்கம், சமயோசிதபுத்தி, தன் வகுப்பினரிடத்தன்பு, சாந்தம் இவைகளைத் தெளிவாயெடுத்துரைப்பது. பெண்கள் ஒவ்வொருவர் கையிலும் இருக்க வேண்டிய உயர்தரக் கதை. ஒரு முறை படிப்பதால் மட்டும் மனம் திருப்தி யடைந்து விடாமல் பன்முறை படிக்கவேண்டுமென்ற பேராவலை விளைவிக்கும்.

தேவதத்தன் அல்லது தேச சேவை.

Royal 16mo. 64 பக்கங்கள் விலை 0-5-0.

தேசாபிமானத்தின் உயர்வையும் தொழிலாளர்களின் கஷ்ட நிலைமையையும் தேசாபிமானிகளின் கடமையையும், சுய நலப்பிரியர்களின் ஆர்ப்பாடச் செயல்களையும் பெண்மக்களின் உயர் குணத்தையும் நன்கு எடுத்துரைப்பது. முழுதும் படிக்கும் வரை புத்தகத்தைக் கீழே வைக்க மனம் வராது.

இதரப் பிரசுரங்கள்.

இந்தியக் கைத்தொழில் சிறப்பு.

Crown 8vo. 216 பக்கங்கள் விலை ரூ. 1.

முற்காலத்தில் இந்தியா படைத்திருந்த செல்வப்பெருக்கையும் இந்தியா செய்துவந்த தொழில் முறைகளையும் இந்தியா அயல் நாடுகளில் செய்து வந்த வியாபாரங்களின் சிறப்பையும் இந்திய நெசவுக்காரரின் வேலைத்திறனையும் இவைகள் அழிவுற்ற காரணங்களையும் விவரமாக எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. இந்தியர்களுக்கு ஆடையை இந்தியா அளிக்கவல்லதா என்ற சந்தேகத்தை நீக்கக்கூடியது. இந்தியா சுபிட்சமடையும் வழியை இப்புத்தகத்தைப்படிப்பதால் தெரிந்து கொள்ளலாம்.

ராஜ சேவையும் இந்தியரும்.

Demy 8vo. 210 பக்கங்கள் விலை 2-0-0.

உயர்தர உத்தியோகங்கள் எவ்வளவென்பதையும் அவைகளில் இந்தியர்களுக்குக் கிடைத்திருப்பது எவ்வளவென்பதையும் அதிகப்பங்கு பெற இந்தியர்களுக்கு உரிமையுண்டாவென்பதையும் விளக்கிக்காட்டுவது.

மேற் கண்ட ஆறு புத்தகங்களடங்கிய செட் ஒன்றுக்கு ஆர்டர் செய்யும் சிந்தாமணி சந்தாதார்க்கு மட்டும் தபாற் கூலியின்றி 4-8-0 ரூபாய்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படும். சுபோத ராம சரிதம் சிந்தாமணி சந்தாதார்க்கு மட்டும் தபாற் கூலியின்றி ஆறு அணாவுக்கு வி. பி. யிலனுப்பப்படும்.

வேண்டுவோர்

சகோதரி வி பாலம்மாள்,
சிந்தாமணி பத்திராதிபர்,
மயிலாப்பூர், சென்னை.

EVERY HOUSE
SHOULD STOCK A BOTTLE OF
AMRUTANJAN
THE BEST PAIN BALM.
Price As. 10 a bottle.

SOME OPINIONS ON CHINTHAMANI.

M. K. ACHARYA AVL., M.L.A., writes under date 31-7-25 :—

Among the very small class of highly cultured Indian ladies who combine ancient scholarship with modern outlook and method Sister V. Balambal ranks very high. The best proof of this is found in the high class Tamil Magazine edited by her under the name of '*Chintamani*,' whose literary excellence combined with simpilicity, variety and usefulness must strike even a casual reader. The Magazine deserves to be read in every Tamil home, as it combines most harmoniously the spirit both of ancient and of modern India. I commend it to every true lover of the Motherland, to every literary, social, and political worker in Tamil Nadu.

***

RAO BAHADUR A. C. PRANATARTIHARA AYYAR AVL., I. S. O., Kilpauk writes under date 4-8-25:—

I have gone through several numbers of Sister Balambal's Tamil Journal, the *Chintamani*, and find them to be quite suitable for reading in Hindu homes and Hindu Girls' Schools. The matter is judiciously chosen, varied and interesting and such in the main as to promote the approach to Hindu ideals.

***

M. R. Ry. B. V. SANKARAKAMESWARA AYYAR Avl., B.A., *Superintendent of Schools, Pudukkottai*, writes under date 12-8-25:—

Chinthamani contains interesting articles suited to pupils of Secondary Schools. The subjects dealt with bear on educational topics.

***

The Editor has taken much pains to present to the public a high class monthly journal, which is bound to attain a large measure of popularity among the Tamil speaking peoples of this Presidency.—*West Coast Reformer*, 22-8-24.

***

Though the Editor appears to be well versed in Sanskrit, it is a pleasure to note that the language is fairly free from Sanskrit imports and is not pedantic. We wish every success to the new monthly.—*Justice*, 22-8-24.

***

It is with much pleasure that I heard of a new venture in Tamil journalism, *Chinthamani*, undertaken by that fine worker in the cause of literature and nationalism, Sister Balammal Garu. Her splendid scholarship in Sanskrit and Tamil is a guarantee that the "Chinthamani" will maintain a high standard of excellence. I trust that the Tamil public will liberally subscribe to the Magazine and thus show in a practical way their appreciation of the author's noble efforts and the duty they owe to their mother-tongue.—Mr. C. RAMALINGA REDDY, M. A. (CANTAB.), M. L. C., *Kilpauk, Madras*.

***

The mere fact that "Chinthamani" is being edited by Sister V. Balammal is in itself a guarantee that it will prove to be of immense practical utility in dispelling the cloud of ignorance now enveloping our ladies, and leading them towards emancipation consistent with Sastraic propriety.—*Arya Matha Samvardhini*.

சிவமயம்.

ஸ்ரீ முருகன் றுணை.

சிந்தாமணியின் மதிப்புரை.

என் சகோதரியாராகிய வி. பாலாம்பிகை யம்மையாருக்கு செந்தமிழ்ச் சைவத் தொண்டன் மணிவாசகச் சரணாலயன் எழுதியது.

அம்மா! தேசத்திற்கு உண்மைத் தொண்டுபுரியும் அடியேனுக்கொரு பெருவகையாயிற்று.

அம்மா! நமது தமிழ்நாட்டுப் பெண்மணிகளின் தாழ்ந்த நிலைமை கண்டு அவர்கட்குத் தனியே யுழைக்க முன்வருவாரொருவரையுங் காணாமன் மிகத் துன்புறுமிவ்வமயத்தில்.

எம்மம்மையாராகிய மங்கையர்க்கரசியாரைப் போன்று, எம்பொன்னையாராகிய ஒளவைப் பிராட்டியாரைப் போன்று, அழகிய மாதாவாகிய கௌரியம்மையாரைப் போன்று, எமக்கும் எம் இறைவர்க்கும் இவ்வுலகுக்கும் அம்மையாராகிய காரைக்காலம்மையாரைப் போன்று தாங்கள் உலகத்திற்குழைக்க முன்வந்திருப்பதுவே அப்பெருவகைக்குக் காரணம்.

உலகத்தில அறியாமை மலிந்த ஆடவர்கள மாட்டுச் சிக்கி அடிமையாகி எந்திரங்களைப் போன்று இடையறாது உழைத்துத்தந்தும எமசகோதரிகளாகிய பெண்மணிகள் துன்பம் ஒழிந்து விட்டது அம்மா!

அம்மா! மேலும் அவர்களின் எவ்வித வறுமைகளையும் நீக்கத் துணிந்து தாங்கள் உதவி வருஞ் சிந்தாமணியே அவர்களுக்குப் பண்டைக் காலத்தைப்போல, எல்லாச் செல்வங்களையு மளித்துக் களிப்புண்டாக்கு மென்பதற்கையமின்று.

அம்மா! புரந்தரன் நவநிதியம் பெற்றும், அளகைக்கோன் எந்நலங்களையும் எப்பொருள்களையும் ஒருங்களிக்கத்தக்கதாகிய சிந்தாமணியைப் பெற்றின்புற்றான். அம்முறையே தாங்கள் உதவிவரும சிந்தாமணியானது நமநாட்டுப் பெண்மணிகளுக்குப் பல நன்மையளிக்கத் தக்கதாயிற்று என்பதொருதலை.

அம்மா! தங்கள் சிந்தாமணியின் அபிப்பிராயம் மேற்கண்ட அளவுதான் என்னால் எழுத முடிந்தது. நமநாட்டுப் பெண்மணிகளுக்கு மிகையாகாமலும் குறைவில்லாமலும் பலனையளிக்கும்படி செந்தமிழ் நாட்டுறையாகிய முருகக்கடவுள் பேரருள்புரிவாராக.

அம்மா! அச்சிந்தாமணியானது எக்காலும சிந்தாமணியாயிருக்க அதற்கொரு வாழ்த்துக் கூறுவது மிகையாகும். ஆயினும், அச்சிந்தாமணியானது இந்நிலவுலகின்கண்ணே நீடூழி யுலாவியாங்கு வாழ்க்கடவதாக. தாங்களும தங்கள் நல முயற்சியும் நீடூழி நீடூழி யோங்கி வளர்வீர்களாக.

அம்மா! தங்கள் பேருதவியால் நஞ்செந்தமிழ்நாட்டுப் பெண்மணிகளெல்லாம் பெருநன்மை யடைவார்களாக.

அம்மா! அடியேன் புரியும் உண்மைத் தொண்டினையும் இருபங்காக்கி ஆண்பாலார் பெண்பாலார் ஆகிய இரு திறத்தினருக்கும் அளிப்பேனாக.

நம்முடைய தொண்டினிமித்தம ஏற்படும் நல்முயற்சிகளெல்லாம் விளைந்தவண்ணமே முட்டின்றி முடியுமாறு எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய அம்மையப்பன் முன்னின்று நடத்துவிப்பாராக.

இப்படிக்கு,

க. மணிவாசகச் சரணாலயன்,

தமிழர் தமிழ்ச் சங்கம், செந்தமிழ்க் கலாசாலையின் அறக்கடவுணிலையம்,
சண்முகநாதபுரம், குன்னக்குடி, இராமநாதபுரம் ஜில்லா,
குரோதன ஆண்டு பங்குனித் திங்கள் 22-ம் தேதி.

The Military Secretary to H. E. the Governor of Madras, writes under date 5th February 1926 :—

I am desired by Her Excellency to acknowledge receipt of your letter dated February 3rd and to thank you for the four copies of the 'Chinthamani'

Her Excellency wishes all success to the paper which appears to be doing very good work.

The Right Hon'ble Mr. V. S. SRINIVASA SASTRIAR, P. C., writes under date 19th January 1926 :—

I have heard good opinions from competent persons of the *Chintamani*. From what I have seen of it, they seem well deserved. With more support from the reading public and regular contributions from those that combine modern knowledge and Tamil Scholarship, the magazine should become a great popular educator.

தென் காசியிலிருந்து ஸ்ரீமதி கிருஷ்ணம்மா எழுதுகிறார்:—

20—1—19.6.

சகோதரி வி. பாலம்மாளுக்கு,

தாங்கள் எழுதிவரும் 'சிந்தாமணி' படிக்கப்படிக்க வெகு ஆனந்தத்தையும், உற்சாகத்தையும் தந்து மனதிற்கு சதாகாலமும் சந்தோஷத்தைக் கொடுக்கிறதென்பதில் ஆக்ஷேபனையுண்டோ! இன்னும் அதில் ஸாக்ஷாத் ஈசுவரனுடைய மகிமையை "ஸைபோதராம சரிதம்" என்னும் ராமாயண காதரூபமாக ஸம்ஸ்க்ருத ஸ்லோகமும் தமிழ் உரையுமாகத் தாங்களியற்றி 'சிந்தாமணியில்' வெளியிடுவதானது சிந்தாமணி அபிமானிகளும், மற்றுள்ளவர்களும் புகழத்தக்கதென்பதற்கு என் ஐயன் ராமச்சந்திரமூர்த்தியே சாக்ஷி. மேலும் சிந்தாமணியை உலகமெங்கும் பரவச்செய்து ஸ்வயம்பிரகாசமாய் விளங்கச் செய்கிறானென்பதில் எனக்கு எல்லையிலா ஆனந்தமுண்டாகிறது.

இரண்டாம் ஆண்டு முதல் சந்தாதாரராகச் சேர்ந்திருக்கும் அபிமானிகளுக்கு.

நம் சிந்தாமணி 1924ஹு ஆகஸ்டு மீ முதல் ஆரம்பித்து முறையே வெளி வந்து கொண்டிருப்பினும் முதல் ஆறு மாதத்திய இதழ்கள் முற்றும் கைவசமில்லாமல் செலவழிந்து விட்டன. 1925 பிப்ரவரி முதற் கொண்டு பத்திரிகைகள் யாவும் கைவசமிருக்கின்றன. அவைகளிலிருந்தே பல அரியவியாசங்களும், செலிமாபேகம் என்னும் மனதைக்கவரும் கதைத் தொடர்ச்சியும், சகோதரியாரால் எழுதப்பட்ட நவமணிபோன்ற சில சிறுகதைகளும் ஆரம்பமாவதால் அந்த பின் ஆறு இதழ்களையும் வாங்கிப்படித்துக் களிப்பீர்களாக. இரண்டாம் வாலியத்தின் 5-வது இதழில் முடிவுபெறும் செலிமாபேகம் என்னும் இனிய கதையின் பூர்வோத்திரத்தை அறிய விருப்புற்றுப் பலபேர்கள் முதலாண்டின் எல்லா பிரதிகளையும் கேட்பதால் இவ்வறிவிப்பை வெளியிடுவது அவசியமாயிற்று. சொற்பப் பிரதிகளே கைவசமிருக்கின்றன. அவ் வாறு பிரதிகளும் தபால்சார்ஜ் உள்பட ரூபா 2—8—0க்கு அனுப்பப்படும்.

மானேஜர்,
"சிந்தாமணி" ஆபீஸ்,
ஸலிவன்ஸ் கார்டன் ரோட்,
மயிலாபூர், சென்னை.

சிந்தாமணி யபிமானிகளுக்கு.

உள்நாட்டுச் சந்தாதாரில் சிலர் இதுவரை முதல் வருஷ சந்தாவை அனுப்பாமலும் இது விஷயமாகப் பல கடிதங்கள் கிடைத்தும் சற்றும் கவனியாது இருப்பதாலும் இண்டிமேஷன் பெற்றும் வி. பி. யைத் திருப்பி விடுவதாலும் நஷ்டமும் பத்திரிகையின் நிர்வாகத்தில் மெத்த சிரமமும் ஏற்படுகின்றது. அயல் நாட்டிலுள்ள சந்தாதார்களுக்குக் கடிதமெழுதுவதற்கு அதிகச் செலவும் வி. பி யனுப்புவதற்கு சிறிதும் சாத்தியமில்லாமையுமாக இருப்பதால் இதுவரை யனுப்பாத அயல்நாட்டு சந்தாதாரர்கள் தாமதப்படுத்தாது தங்கள் சந்தாவை யனுப்பிவிடுவார்களென்று நம்பி யிருக்கிறேன். ஆகையால் உள்நாடு வெளிநாடு சந்தாதார் அனைவரும் தயவுசெய்து இனியும் சிறிதும் தாமதப்படுத்தாது தம் சந்தாவை மணியார்டர் செய்யவேண்டுமாயும் இதுவரை முதல் வருஷ சந்தாவையுமனுப்பாமலிருப்பவர்கள் அத்துடன் இரண்டாவது வருஷ சந்தாவையும் சேர்த்து அனுப்பினால் மெத்த சமயோபகாரமாயிருக்குமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன். சந்தா பாக்கியைப்பற்றிக் கடிதமூலமும் பத்திரிகையில் அறிக்கைகள் மூலமும் பிரஸ்தாபிக்கவேண்டிய சிரமத்தை 'சிந்தாமணி' யபிமானிகள் இனிமேலாயினும் எனக்கு ஏற்படுத்தாமலிருக்கவேண்டுமாயும் கேட்டுக்கொள்ளுகிறேன். சந்தா பாக்கி, பலகடிதங்கள் எழுதுதல், அனுப்பும் வி. பி. திரும்பி வருவது இவைகளினால் எனக் கேற்படக்கூடிய வீண் சிரமத்தையும் பெருத்த நஷ்டத்தையும் இனிமேல் எனக்கு ஏற்படுத் தாமல் மறு தபாலில் சந்தாவை மணியார்டர் செய்து சிந்தாமணி செவ்வனே நடை பெறுவதற்கு உதவி புரிவார்களென நம்புகின்றேன்.

இங்ஙனம்,
சகோதரி வி. பாலம்மாள்.
பத்திராதிபர்.

CHINTHAMANI.

A HIGH CLASS TAMIL MONTHLY.

(Devoted mainly to the cause of Indian Women.)

EDITOR SISTER V. BALAMMAL.

Vol. II.] May-June 1926. [No. 10-11.

श्रीशारदायै नमः ।

श्रीरामचन्द्र परब्रह्मणे नमः

சிந்தாமணி

சுபோத ராம சரிதம்.

COMPOSED AND ANNOTATED BY
SISTER V. BALAMMAL
DAUGHTER OF
Late Dr. A. R. VAIDYANATHA SASTRIAR, M. A., M. B. & C. M.
(*All Rights reserved by the Authoress*)

सुबोधराम चरिते

॥ अरण्यकाण्डः ॥

करघृतबाणशरासं खरदूषणमुखनिशाचरारातिम् ।
वरदं वारिजनयनं नीरदनीलं रघूद्वहं नौमि ॥

वारितनैर्ऋतजातं पालितवनवासिसकलमुनिबृन्दम् ।
साधितनिजसाम्राज्यं मानितसाकेतमानवं नौमि ॥

अथ दाशरथिस्सीतालक्ष्मणाभ्यां समन्वितः ।
दण्डकाख्ये महारण्ये विचचार धनुर्धरः ॥ १ ॥

अथ பிறகு सीतालक्ष्मणाभ्यां சீதை லக்ஷ்மணர் இருவர்களுடன் समन्वितः கூடிய दाशरथिः ஸ்ரீராமர் धनुर्धरः (सन्) விற்பிடித்தவராக दण्डकाख्ये தண்டகாவனமென்ற பெயருடைய महारण्ये பெரிய அரண்யத்தில் विचचार சஞ்சரித்தார். ॥ १ ॥

तत्रागतं विराधाख्यं रक्षस्सीतापहारकम् ।
निहत्याश्वास्य वैदेहीं रक्षोगात्रं बिलेऽक्षिपत् ॥ २ ॥

तत्र அவ்விடத்தில் आगतं வந்தவனும் सीतापहारकं சீதையை எடுத்துச் சென்றவனும் இருக்கிற विराधाख्यं விராதனென்ற பெயருடைய रक्षः ராக்ஷஸனை (सः அந்த ராமர்) निहत्य கொன்று वैदेहीं சீதையை आश्वास्य சமாதானப்படுத்தி रक्षोगात्रं ராக்ஷஸனின் உடலை बिले குழியில் अक्षिपत् போட்டார். ॥ २ ॥

(*To be continued.*)

ஸ்ரீராமஜயம்.

சிந்தாமணி

தமிழ்நாட்டுப் பெண்மணிகளின் முன்னேற்றத்தை முக்கிய
மாகக்கொண்டு வெளிவரும் ஓர் உயர்தர மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

பத்திராதிபர் சகோதரி வி. பாலம்மாள்.

மலர் II.] அக்ஷய—வைகாசி—ஆனி. [இதழ் 10-11.

தேச பக்தியும் பெண் மக்களும்.

பத்திராதிபர்.

தேசபக்தி என்ற சொல்லைப் பொதுவாக ஆரா ய்ச்சி செய்து பார்ப்போமானால் தான் பிறந்த நாடு, தான் வசிக்கும் தேசம் இதனிடையே பேரன்பு கொள்ளல் என்பதையே இப்பதம் விளக்கிக் காட்டுகிறது. தேசத்தினிடையே பக்தியிராதுபோயின் தேசமக்களிடையே சகோ தர வாஞ்சை ஏற்படுவதெங்ஙனம்? தேச மக்களி டையே ஒற்றுமை குறைவுபடின் அதனால் தேச முன்னேற்றம் பெரிதும் பாதிக்கப் படும். தேச முன்னேற்றம் கெடுவதால் மன வேற்றுமையும் அனுவசியப் போராட்டங்களும் நிலை பெறுகின்றன ஆனதுபற்றி ஒவ்வொரு வரும் தம் தாய் நாட்டினிடத்தில் அன்பு கொண்டு நடத்தலே ஜன சமூக முன்னேற்றத் திற்கு ஒப்பற்ற சாதனமாகவிருக்கிறது. அயல் நாட்டுச் சரித்திரங்களைக் கவனிப்போமாயின் தேச பக்தி என்ற ஒரே லக்ஷியத்தை மனதிற் கொண்டு அந்நாட்டார் ஒரு சிறு காரியம் முதல் பெருங்காரியம் வரையில் நடத்துகின்ற னர் என்பதைத் தெளிவா யறிந்து கொள்ள லாம்.

தேச பக்திக்கும் தேச மகா ஜனங்களின் ஒற் றுமைக்கும் தேச முன்னேற்றத்திற்கும் அடிப் படையாக அமைந்துள்ளது தேச பாஷையாம். எந்நாட்டில் தேச பாஷையானது புறக்கணிக் கப்படுகின்றதோ, எந்நாட்டில் தேச பாஷையா னது பிரசாரமடையவில்லையோ அந்நாட்டில் சம ரசப்பான்மையானது ஓடி ஒளிந்து விடுவதில்

190378

தடையெ[illegible]கிறது? அன்னிய நாட்டின் மேல் படையெடுத்துச்சென்று வெற்றி பெற்ற அரசன் ஒருவன் அந்நாட்டினர்க்குத் தங்களிடையே பற்றுதலுண்டாகச் செய்வதின் நிமித்தம் அந்நாட்டினர் ஏற்கனவே வழங்கி வந்த பாஷையை மறுத்துத் தன் தேச பாஷையைக் கற்கும்படி வற்புறுத்தியதாயும் முடிவில் ஒரு சிறு பெண்மணியானவள் பரிசு பெறும் சமயத்தில் தன் தேச பாஷையையே நிலைக்கச்செய்யும்படி வேண்டிக்கொண்டாள் என்பதாகவும் தேச சரித்திரம் கூறுகின்றது இக்காரணங்களால் தேச பக்தியும் அதற்கடிப்படையான தேச பாஷைப் பிரசாரமும் ஜன சமூகத்திற்கவசியமென்று ஏற்படுகின்றது. தேசபக்தி என்பது ஆடவர்க்கு மட்டும் உரியதா அல்லது பெண்களுக்கும் அதில் பங்கு உண்டா வென்பதை விசாரிப்பதே இவ்வியாசத்தின் நோக்கமாகும்: ஆடவர்களுக்கு தேசபக்தி அவசியமென்றும் இதனால் அவர்கள் தேச முன்னேற்றத்திற்குப் பாடுபடுவார்களென்றும் இத்தகைய ஆற்றல், பெண்களிடத்தில் சிறிதுமில்லை யென்பதும்பொதுவாக ஜனங்களிடையே தங்கியுள்ள அபிப்பிராயமாக விருக்கிறது. ஆடவர்கள் பிரவேசிக்கும் ஒவ்வொரு காரியங்களிலும் ஜயம் பெற்றுத் திரும்புவதற்கு வீட்டிலுள்ள பெண்மணிகளின் பிரார்த்தனையும் ஊக்கமுமே காரணமாயிருக்கின்றன வென்பது பூர்வ சரித்திரங்களிற் தெளிவாகக் காணப்படுகின்றது. பெண்களுக்கு தேச பக்தி வேண்டுமாயின் அதற்காக அவர்கள் ஆடவர்களைப்போல் அதிக சிரமப்படவேண்டியதே இல்லை. வீட்டிலிருந்தவாறே நம் நாடு நன்கு வாழவேண்டுமென்று எண்ணி வருவார்களாயின் இவர்களது ஒப்பற்ற ஆத்ம சக்தியானது இவர்களால் கணவன், சகோதரன், மகன், தந்தை என்று போஷிக்கப்படும் ஆடவர்களின் மனதைத் தெளிவுபடுத்தித் தக்க சமயங்களில் உற்சாகப்படுத்து மென்பதும் இன்னம். தேச பக்திக்கு தேச நிலையை நன்குணர்வதற்கு தேச பாஷையே மூலாதாரமாயிருக்கின்றதாலும் பெண்மக்கட்குரிய படிப்பும் தேச பாஷையையே அனுசரித்திருப்பதினாலும் பெண்மக்களிடையே தேச பக்தியை நிலைக்கச் செய்வது சிரமசாத்தியமன்று. தற்சமயம் நமது பெண்மணிகளின் நிலைமை படிப்படியாகத் தாழ்வுறாது உயர்ந்து விளங்கவேண்டுமாயின் தாங்கள், தங்கள் இனம், தங்கள் க்ஷேமம், தங்களது முன்னேற்றம், தங்களுக்குரிய கல்வி என்ற ஊக்கம் பெண்மக்களிடையே உண்டாதல் அவசியம். தம் இனத்திற்கு அவசியமான தேவைகளையும் அபிவிருத்தியையும் தேடுவதே பெண் சமூகம் தேச பக்தியடைவதற்கு முதற்படியாக விருக்கிறதென்பதை நன்குணரவேண்டும். ஒருவருக்கேற்பட்ட இழிவு மற்றவர்க்கென்றும், ஒருவரின் தாழ்ந்த நிலையானது மற்றவர்களையும் பெரிதும் பாதிக்குமென்றும், பெண்மக்களின் உயர்ந்த நடவடிக்கைகளும் ஒற்றுமையுமே தேச முன்னேற்றத்திற்கு ஆதாரமாயிருக்கிறதென்பதையும் பெண்மக்களே யன்றி ஆடவர்களும் நன்கறிந்து கொள்ளல் வேண்டும். கிருகதேவதைகளாயும் குடும்ப நிர்வாகிகளாயுமுள்ள பெண்மணிகள் வீட்டிலிருந்தவாறு தேச நிலையைத் தெரிந்து தேசம் உன்னத நிலையையடைய வேண்டியதின் நிமித்தம் தங்களது பரிசுத்தம் வாய்ந்த மனத்தோற்றத்தைத் தேச பக்தியில் ஈடுபடுத்தித் தியானித்துவருவார்களாயின் இதனால் தேசம் சமரசப்பான்மையையும், சமூக ஒற்றுமையையும், சகோதர உணர்ச்சியையும் அடைந்து இந்திய நாகரிகமானது நிலைத்து அபிவிருத்தியடையத் தடையில்லை. ஆனது பற்றித் தேச பாஷையைச் செவ்வையாய்க் கற்பதினால் தேசபக்தியும் இதனால் தேச முன்னேற்றமும் ஆடவரிடையே நிலைப்பதற்குத் தாய் ஸ்தானத்திருக்கும் பெண்மணிகளுக்குத் தேச பக்தி அத்தியாவசியமாகும்.

சிந்தாமணிச் சிறப்பு வெண்பா.

(தேவகோட்டை ஸ்ரீமான் கு. பெ. வீ. ராமசாமி செட்டியார் இயற்றியது)

சீராம நற்கதையுஞ் சேயிழையார் நல்லொழுக்கு
மாராத வன்பின் மகத்துவமும் — நேராக
வந்தா தரிக்கும் வழக்கு முறையாக்குஞ்
சிந்தா மணியதனின் சீர். (1)

சீர்பெருக்குஞ் செந்தாட் டிருமகளைச் சேர்ப்பிக்கும்
ஏர்பெருக்கும் ஞாலத் தினிதாகக் — கார்பெருக்கும்
ஞான முதலறங்க ளாற்றுமென வளர்க்குந்
தானஞ்சிந் தாமணியே தான். (2)

தானு யுலவிவருந் தக்கோர் திருக்காத்தின்
பேனு நுனியிற் பிறந்திருக்கு — மேனுள்
செயற்பால செப்புமே சிந்தா மணியுலகோர்
உயற்பால வோங்கு மொளி. (3)

ஒளிபரவும் ஞாலத் தோரிருளை நீக்குங்
களிமிகுதி ஞானங் கதிக்குந் — தெளிவுடைய
சென்னெறிகள் சேருஞ் சிந்தா மணியுலகுக்
கென்னெறியுங் காட்டா திரா. (4)

இராதே பவங்க ளினியுலகிற் றுன்பம்
வாராதே தவங்கள் வலுக்கும் — தாராதே
பெறுவா ரிலையாகும் பேசருமெய் ஞானம்
உறுவார்சிந் தாமணியை யோரின். (5)

ஓராத பாலற் குவகை தருஞ்செல்வர்
தீராத வாசைத் திறந்திகழும் — நேராம்
புலத்தோற்குப் போதம் பொழியுமே யான்ற
நலத்தோற்கு மாகும் நயந்து. (6)

நயன்சாரும் நாவலர்க்கு நற்புதுமை காட்டும்
பயன்சாரும் பள்ளி பயில்பாலர் — செயஞ்சேரும்
நந்தாய் மொழியாகும் நல்லின்ப வீடளிக்குஞ்
சிந்தா மணிவசனச் சீர். (7)

சீரய வென்றே சிறப்பாற் புலவோர்தம்
நேராகச் செல்லும் நெறிதேரும்—பேரான
முப்பழமுந் தேனு முதுநெயுஞ் சேர்ந்திருக்கு
மப்பழஞ்சிந் தாமணியே யாம். (8)

ஆமாம் புலவீ ரருந்தமிழ்ச்சிந் தாமணிபோற்
தேமாங் கனியுலகிற் றேடுதற்கு — நாமாருஞ்
செல்வோமே யாகிற் செவ்வேளுந் தந்திமுக
நல்லோனு மாவேம் நயந்து. (9)

நயந்தவினை தீர்க்கும் நற்றாயுந் தந்தை
பயந்திறப் பலனைப் பண்பாய் — வியந்துநிதங்
கண்டேத்துஞ் சிந்தாத கண்மணியைக் கற்புடையார்
கொண்டேத்த லென்றுங் குணம். (10)

ஜான்சி ராணி—லக்ஷ்மி பாய்.

(ஸ்ரீமான் S. R. வெங்கடரமணய்யர், B.A., B.L.)

நமது தேசத்தைப்பற்றி உண்மையானதும் நியாயமானதுமான சரித்திரம் ஒன்றாவது இல்லையென்பது எல்லோருக்கும் நன்கு தெரியும். நாம் படிக்கும் சரித்திரங்களில் பெரும்பாலானவை ஆங்கில சரித்திர ஆசிரியர்களினாலேயே எழுதப்பட்டுள்ளன. ஆனால் அவை யாவும் உண்மையானவை என்று ஒருவரும் ஏற்றுக்கொள்ளார். ஆங்கில சரித்திராசிரியர்கள் யாவரும் நமது தேசிய வீரர்களைப்பற்றி எழுதும்போதெல்லாம் அவர்கள் செய்த நல்ல காரியங்களை மறந்து அவ்வீரர்கள் ஏதேனும் சிறுபிழை செய்திருப்பின் அவைகளைப்பற்றியே அதிகமாக எழுதியிருக்கிறார்கள்.

உதாரணமாக, மஹாராஷ்டிர ராஜ்யத்தை ஸ்தாபித்த சிவாஜி மகாராஜாவைக் கொள்ளைக்காரனென்றும், கள்வனென்றும், மோசக்காரனென்றும் ஆங்கில சரித்திராசிரியர்களான கிராண்ட் டப், (Grant Duff) வின்சென்ட் ஸ்மித் (Vincent A. Smith) ஆகியவர்கள் எழுதியிருக்கிறார்கள். ஆனால் அவை யாவும் சுத்தப் பொய் என்று காலம்சென்ற கனம் ரானடே அவர்களும் வட இந்தியாவில் ஜாதுநாத் சர்க்கார் (யதுநாத் சர்க்கார்) அவர்களும் மிக்க ஆராய்ச்சிசெய்து எழுதியிருக்கின்றனர். இதேமாதிரி பஞ்சாப் அரசரான ரஞ்சித் சிங்கையும் மற்றும் ஜான்சி ராணியைப் போன்ற பெண்மணிகளையும் காரணமின்றிப் பழிக்கும் அபவாதத்திற்கும் உள்ளாக்கியிருக்கிறார்கள்.

ஆகவே இவ்விதக் குறைகள் யாவும் தீர வேண்டுமாயின் இந்தியர்களாகிய நாம் நமது தேச சரித்திர விஷயமாய்ப் பூர்வீக ஆதாரங்களைக்கொண்டு ஆராய்ச்சி செய்து நடுவுநிலைமையுடன் நமது தேச சரித்திரத்தைப்பற்றி எழுதுவதுதான் உத்தமமான காரியம்.

ஜான்சி ராணியைப்பற்றிச் சொல்வதற்கு முன் அக்காலத்திய இந்தியாவின் ஸ்திதியையும், இந்தியாவை ஆங்கில உத்தியோகஸ்தர்கள் ஆண்டுவந்த விதத்தையும் அறிவது உசிதமெனத் தோற்றுகிறது.

கிறிஸ்தவ சகாப்தம் 1840-ம் வருஷம் முதல் 1856-ம் வருஷம் வரை இந்தியாவை டல்ஹௌஸி பிரபு ஆண்டுவந்தார். இவரது ஆளுகையில் இரண்டாவது சீக் யுத்தமும், இரண்டாவது பர்மா யுத்தமும் முறையே 1848-49-ம் வருஷத்திலும், 1852-ம் வருஷத்திலும் நடந்தன. யுத்தம் முடிந்தபின் இரண்டு ராஜ்யங்களையும் ஆங்கில அரசாட்சிக்கு உட்படுத்தினார்.

டல்ஹௌஸி பிரபுவின் நோக்கம் என்னவெனில் இந்தியாவில் ஆங்கில அரசாட்சியை விருத்தி செய்யவேண்டும் என்ற எண்ணம் ஒன்றேதான். இதன்பொருட்டு சுதேச ராஜ்யங்களையும் பிரிட்டிஷ் ஆளுகைக்குட்படுத்த டாக்ட்ரின் ஆப் லாப்ஸ் (Doctrine of Lapse) என்ற சட்டத்தை உண்டாக்கினார். நேராக சந்ததியற்ற மகாராஜாக்களின் ராஜ்யங்களை அவ்வரசருடைய பந்துக்கள் ஒருவரும் ஆளக்கூடாதென்றும் அங்ஙனம் சந்ததியில்லாதிறந்த ராஜாவின் நாடு ஆங்கில அரசாட்சிக்கு உட்பட்டுவிடு மென்பதுமே அந்த சட்டத்தின் சாராம்சம். இதனால் சந்ததியற்ற மகாராஜாக்கள் கடைசிகாலத்தில் ஸ்வீகாரம் செய்துகொள்ளும் பாத்தியதையை இழந்தனர். இப்பரத கண்டத்தில் பண்டைக்கால முதல் அனுபவத்திலிருந்துவந்த இவ்வழக்கத்திற்குக் கேடுசெய்த டல்ஹௌஸி பிரபுவின் சட்டத்தை இந்திய ராஜாக்கள் யாவரும் வெறுத்தனர். பிறகு டல்ஹௌஸி பிரபு தமது சட்டத்தின் மூலமாய் அநேக சுதேச ராஜ்யங்களைப் பிரிட்டிஷ் ஆட்சிக்குட்படுத்தினார்.

சிவாஜி மகாராஜாவின் நேர் சந்ததியான சதாரா ராஜா 1848-ம் வருஷம் ஆண் சந்ததியில்லாமலிறந்தார். அவர் சாகும் தருணத்தில் ஸ்வீகாரம் செய்துகொண்டதையும் நிராகரித்து டல்ஹௌஸி பிரபு சதாராவை இங்கிலீஷ் ராஜ்யத்தோடு சேர்த்து விட்டார். சதாராவைப் போலவே 1853-ம் வருஷம் ஜான்சி ராஜ்யத்தையும் மஹாராஷ்டிர ராஜ்யமான நாகப்பூரையும் இங்கிலீஷ் ராஜ்யத்தோடு சேர்த்தார்.

இம்மாதிரியே தெற்கில் கர்நாடக நவாபின் பிரதேசத்தையும் தஞ்சாவூரையும் அவ்விரு தேசத்தரசர்களும் சந்ததியற்றிறக்கவே அவ்விருதேசங்களையும் டல்ஹௌஸி பிரபு ஆங்கில அரசாட்சிக்கு உட்படுத்தினர். 1856-ம் வருஷத்தில் அயோத்தியையும் பிரிட்டிஷ் ராஜ்யத்தோடு சேர்த்தார்.

ஜான்சி ராஜ்யம் மத்திய இந்தியாவில் உள்ள ஒரு சிறுராஜ்யம். அது பண்டைக்காலம் முதல் ராஜபுத்திரர்களாலும் பிறகு சிவாஜி மகாராஜா காலம் முதல் மஹாராஷ்டிரர்களாலும் ஆளப்பட்டு வந்தது. டல்ஹௌஸி பிரபுவின் காலத்தில் அவ்விராஜ்யத்தை கங்காதாராவ் என்பவர் ஆங்கில ஆதிபத்யத்தின் கீழ் ஆண்டு வந்தார். அவரது மனைவியாகிய ராணி லக்ஷ்மி பாய் என்ற பெண்மணியைப்பற்றித்தான் நாம் இங்கே கவனம் செலுத்தவேண்டும்.

இம்மாது 1834-ம் வருஷம் நவம்பர்மீ 19ந் தேதி புண்யக்ஷேத்திரமாகிய காசி நகரில் பிறந்தாள். இவளது தந்தை மோரோபந்த் டாம்பி என்பவர் இரண்டாவது பீஷ்வாவான இரண்டாவது பாஜிராவ் என்பவருக்குத் திவானாகவிருந்தார். லக்ஷ்மிபாய் மிக்க சௌந்தர்ய ரூபலாவண்யமும் அதிசயிக்கத் தக்க புத்திக் கூர்மையும் சாதுர்யமும் படைத்த பெண்மணி. சிறு வயது முதல் கான்பூருக்கு அருகாமையிலுள்ள பித்தூரில் பீஷ்வாவின் குமாரர்களுடன் லக்ஷ்மிபாய் கல்வி கற்றுவந்தாள். அவர்களெல்லோரைக் காட்டிலும் அதி சீக்கிரத்தில் தான் படிக்கவேண்டியவைகளைக் கற்றுணர்ந்த பின் வீரர்களுக்குரிய குதிரை சவாரி, கத்தி வீசுதல், அம்பெய்தல் முதலிய யாவையும் அவ்வரச குமாரர்களோடு கற்று வந்தாள். 1842-ம் வருஷத்தில் இம்மாது ஜான்சி ராஜாவான கங்காதராவுக்கு வாழ்க்கைப்பட்டாள். வாழ்க்கைப்பட்டும் தனது பதினேழாவது வயது வரை பித்தூரிலேயே வசித்து அரசகுமாரர்களோடு வித்தைகளைக்கற்று வந்தாள். அவளது நாயகனான கங்காதாராவும் தனது மனைவியின் சாமர்த்தியத்தைக் கண்டு மிக்க மகிழ்வுற்றான்.

சொற்ப காலம் சென்றபின் லக்ஷ்மிபாய் ஜான்சி நகரையடைந்த நாள் முதல் பிரதி தினமும் திரவிய சகாயத்தைத்தேடி வருவோர்க்கு வேண்டிய திரவியத்தைக் கொடுத்து மற்றும் ஏழைகளையும் அனாதிகளையும் ரக்ஷித்து வந்தாள்.

இப்படியிருக்குங்கால 1852-ம் வருஷம் லக்ஷ்மிபாய் பகவான் கிருபையால் ஓர் ஆண் மகவை யீன்றனள். அம்மகவு சில மாதங்களே உயிருடனிருந்து பிறகு இறந்து போயிற்று. எரிகிற புண்ணில் கோலிடுவதுபோல் ஏற்கனவே குழந்தை யிறந்த விசனத்தால் மனத்தாபத்தை யடைந்திருந்த லக்ஷ்மி பாய்க்கு 1853-ம் வருஷம் தன் நாயகனான கங்காதராவ் ஏதோ வியாதியினால் தென்னாடெய்தியது சொல்லொணாக் கஷ்டத்தை விளைவித்தது. கங்காதாராவுக்குப்பின் ராஜ்யத்தை ஆளுவதற்கு சந்ததி இல்லாததையும் டல்ஹௌஸி பிரபு

ஆவணக் காப்பக நிலையம்
12378

அக்காலத்தில் கைப்பற்றிவந்த ராஜீக முறையால் ஜான்சி ராஜ்யம் பிரிட்டிஷ் ராஜ்யத்துடன் சேர்க்கப்பட்டதையுமறிந்த ஜான்சி ஜனங்கள் மிக்க விசனமடைந்தனர். கங்காதரராவின் எதிர்பாராத மாணத்தினுல் லக்ஷ்மி பாய்க்கு நேர்ந்த கஷ்டத்தை என்னென்று சொல்வது.

"மக்களிழந்த இடும்பையினும் மனையாளிழந்த இடும்பையினும் மிக்க இடும்பை ஓவாத விதவை யிடும்பை" என்று கூறியுள்ளார் ஒட்டக் கூத்தரும். கங்காதரராவுக்குப் பிறந்த புதல்வனிறந்து போனமையால் தனது வமசம் அழிந்து போகாமலிருப்பதற்காகவும் ராஜ்யத்தை ஆளுவதற்காகவும் தனது நெருங்கிய பந்துக்களில ஒருவரைத் தான் சாவதற்கு இரண்டு நாள் முனைதாக கங்காதராவ் ஸ்வீகாரம் செய்து கொண்டார். அச்சமயத்து அரசன் மண்டபத்திலிருந்த ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களும் மறற இந்திய உத்தியோகஸ்தர்களும் அவாது ஸ்யீகாரத்தை அங்கீகாரம் செய்து ராஜ்ய நிர்வாகம செய்வதாகவும் வாக்களித்தார்கள்.

ஜான்சி ராஜ்யத்தரசரான கங்காதரராவ் ஆங்லேயருக்கு எச்சமயத்தும் தன்னுலியன்றளவு உதவிசெய்து ஆங்கிலக்கொடிக்கு மிக்க ராஜ விசுவாசமும் நேசமும காட்டிவந்தமை பற்றிச் சாகும் தருவாயிலிருந்த கங்காதரராவுக்கு ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் அங்ஙனம் வாக்களித்தனர். ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் யாவரும் கங்காதரராவின் ஸ்வீகாரத்தை டல்ஹௌஸி பிரபு அங்கீகரிப்பாரேயன்றி நிராகரிக்கமாட்டார் என்று நம்பியிருந்தார்கள். ஆனுல் டல்ஹௌஸி பிரபுவோ இதை யெல்லாம நினைத்தாரில்லை. ஆகவே கங்காதரராவின் விண்ணப்பம் டல்ஹௌஸிக்குக் கிடைத்தவுடன் அவர் கங்காதரராவுக்கு ஸ்வீகாரம் செய்து கொள்ள அதிகாரமில்லை யென்றும் இங்ஙனம் ஸ்வீகாரம் செய்து கொள்ளப்பட்டவர் ஜான்சி ராஜ்யத்தை ஆள பாத்தியமுடையவரல்லர் என்றும் எழுதி அதைப் பிரிட்டிஷ் நாடுகளோடு சேர்க்கும்படிக்குத் தமது கீழ் உத்தியோகஸ்தர் ஒருவரை ஜான்சிக்கு அனுப்பினுர். இது நிற்க.

கங்காதரராவின் சரமக்கிரியைகள் யாவும் நடந்தேறியபின் மகா ராணி லக்ஷ்மிபாயை அவள் நெடுங்காலமாய் வசித்து வந்த கோட்டையினின்றும் விலகும்படிக்கும் அக்கோட்டைக்குச்சற்று தூரத்திலிருந்த ஓர் சிறு அரண்மனையில் வசிக்கும்படிக்கும் அக்காலம் ஜான்சியிலிருந்த உத்தியோகஸ்தர்கள் டல்ஹௌஸி பிரபுவின் தூண்டுதலினுல் உத்திரவு பிறப்பித்தார்கள். துரதிர்ஷ்டசாலியான லக்ஷ்மிபாய் யாதென்றும் செய்யத்தோன்ருளாய் வெகு சாந்தத்துடனும் அடக்கொணுத் துயரத்துடனும் தன் கண்களில் நீர்ததும்ப உத்திரவுப்படிக்கு கோட்டையை விட்டகன்றனள்.

இது போதாதென்றுகருதி டல்ஹௌஸிபிரபுவால் அனுப்பப்பட்ட உத்தியோகஸ்தர் ராணியின் மெய்காப்போர், வேலையாட்கள் முதலியவர்களில் பெரும்பாலரை வேலையினின்று நீக்கும்படிக்கும் ராஜாங்க விஷயங்கள் யாவும் அது முதல இங்கிலீஷ் அரசாட்சிக்கு உட்பட்டு விட்டனவென்றும உத்திரவு பிறப்பித்தார். மேலும் ஜான்சியிலிருந்த ஆங்கில உத்தியோகஸ்தர்கள் ராணியை ஜான்சியைவிட்டு விலகும்படிக்கும் ஆக்ஞைசெய்தார்கள். என் செய்வாள் பாவம்! இருபது வயது கூட நிறம்பப் பெருத லக்ஷ்மிபாய் தான இதுவரை அவர்கள் உத்திரவுக்குக் கீழ்ப்படிந்து நடந்தது தனக்கே கெடுதியை விளைவித்ததென் றெண்ணி தான் எவ்விதத்தாலும தனதுரிமைகளை வாதாடிப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்று திர்மானித்தாள். ஆகவே தனக்கு அவ்வாங்கிலேய உத்தியோகஸ்தரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை நிராகரித்துத் தான் தனது கௌரவத்தையும் தனது குடும்பத்தின் உரிமையையும் நனகு பாதுகாத்துக்கொள்ள முதன் முதல்